Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 141/2026** |
| Deposition of witness for | :: | **PW. 4** |
| Name | :: | **தாமரைகண்ணன் (முதல் நிலை காவலர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS வின் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**15.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போதும் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் முதல் நிலை காவலராக பணியில் உள்ளேன். கடந்த 26.02.2026 ம் தேதி அருப்புக்கோட்டை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் அருண்குமார் அவர்களுடன் நான் மற்றும் முதல் நிலை காவலர் விக்னேஷ்குமார் ஆகியோர்கள் அருப்புக்கோட்டை நகரில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து 11.00 மணிக்கு அருப்புக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே வந்தபோது சந்தேகத்திற்கு இடமான வகையில் வெள்ளை நிற சிமெண்ட் சாக்கு பையுடன் நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க அவரது பெயர் குணசேகரன் என்று கூறியவர் வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்ததில் அரசு முத்திரையுடன் கூடிய சுமார் 180 மிலி அளவுள்ள OLD SECRET XXX RUM –10, EXPRESS BRANDY – 17, MENS CLUB BRANDY – 8 பாட்டில்கள் என 35 மது பாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி மதுபாட்டில்கள் பற்றி அந்த நபரிடம் விசாரித்தபோது விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் மதுபாட்டில்களை

விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக சார்பு ஆய்வாளர் அந்த இடத்திலேயே அந்த நபரை கைதுக்கான காரணத்தை கூறி காலை 11.10 மணிக்கு கைது செய்தும் மது பாட்டில்கள், பாட்டில்களை வைத்திருந்த சாக்கு பை ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்ற அங்கிருந்த தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் காவலர் சாட்சிகளாகிய எங்கள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அதில் நானும், முநிகா விக்னேஷ்குமாரும் கையெழுத்து செய்தோம். தற்போது நீதிமன்றத்தில் என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான்.

**3.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி மற்றும் சொத்துக்களுடன் 12.00 மணிக்கு அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம் வந்து குணசேகரன் என்பவர் மீது நிலைய குற்ற எண். 110/2026 பிரிவுகள் 4(1)(C) TNP (Amendment Act –2024) Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட நடவடிக்கைகளுக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்மந்தமாக சார்பு ஆய்வாளர் அவர்கள் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 141/2026** |
| Deposition of witness for | :: | **PW. 3** |
| Name | :: | **விஜயகுமார் ( சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**15.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது விருதுநகர் மேற்கு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 10.03.2026 ம் தேதி நான் அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் அருண்குமார் அவர்களால் குற்ற எண். 110/2026 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்து முதற்கட்ட விசாரணை மேற்கொண்ட வழக்கு கோப்பினை பார்வையிட்டு விசாரணைக்கு எடுத்து கொண்டு சாட்சிகளை விசாரணை செய்ததில் அவர்கள் முந்தைய புலன் விசாரணை அதிகாரியிடம் கூறிய சங்கதிகளையே என்னிடமும் கூறியதால் நான் தனியாக வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை.

2. பின்னர் 10.03.2026 ம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றபட்ட 180 மிலி அளவுள்ள OLD SECRET XXX RUM –10, EXPRESS BRANDY – 17, MENS CLUB BRANDY – 8 பாட்டில்கள் என 35 மது பாட்டில்கள் மற்றும் மதுபாட்டில்கள் வைத்திருந்த சாக்கு பையை ஆகியவற்றை உதவி ஆணையர் (Excise Departement, Virudhunagar) அவர்களிடம் ஒப்படைத்து

ந.க.க.எண். 2/20.01.2025 ன்படி மேற்படி பாட்டில்களை அழித்தற்கான சான்றினை பெற்றேன். **(அழித்தல் சான்று அசாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

**4**. பின்னர் அன்றைய தினம் இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து எதிரி குணசேகரன் என்பவர் மீது பிரிவு 4(1)(C) TNP Act (Amendment) ன் கீழ் குற்ற இறுதி அறிக்கை கனம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் தான் இவ்வழக்கின் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் பாட்டில்களை அழிப்பதற்கான நடவடிக்கை மட்டும் தான் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி மதுபாட்டில்களில் மதுபானங்கள் தான் இருந்ததா என்பதை காண்பிக்க பகுப்பாய்விற்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து உற்பத்தி செய்யப்பட்டவை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக எதிரியின் மீது போடப்பட்ட வழக்கை நான் முறையாக விசாரணை செய்யாமல் எதிரிக்கு எதிராக குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**

Crl.Misc.39

DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure.)
-------

IN THE COURT OF **JUDICIAL MAGISTRATE COURT, ARUPPUKOTTAI**.

| | | |
|---|---|---|
| Miscellaneous | :: | **CC 141/2026** |
| Deposition of witness for | :: | **PW. 2** |
| Name | :: | **அருண்குமார் ( சார்பு ஆய்வாளர்)** |
| Father's Name | :: | |
| Village | :: | |
| Taluk | :: | |
| Age | :: | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2026

---

**எதிரி ஆஜர் இல்லை. பிரிவு 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் .**

**15.06.2026**

**முதல் விசாரணை:**

1. நான் தற்போது திருச்சுழி காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் உள்ளேன். கடந்த 26.02.2026 ம் தேதி அருப்புக்கோட்டை நகர் காவல் நிலைய சார்பு ஆய்வாளராக பணியில் இருந்தபோது நான் மற்றும் முதல் நிலை காவலர்கள் தாமரைகண்ணன், விக்னேஷ்குமார் ஆகியோர்கள் அருப்புக்கோட்டை நகரில் மதுவிலக்கு சம்மந்தமாக ரோந்து சுற்றி கண்காணித்து 11.00 மணிக்கு அருப்புக்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகே வந்தபோது வெள்ளை நிற சிமெண்ட் சாக்கு பையுடன் சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்று கொண்டிருந்தவரை விசாரிக்க அவரது பெயர் குணசேகரன் என்று கூறியவர் வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்ததில் அரசு முத்திரையுடன் கூடிய சுமார் 180 மிலி அளவுள்ள OLD SECRET XXX RUM –10, EXPRESS BRANDY – 17, MENS CLUB BRANDY – 8 பாட்டில்கள் என 35 மது பாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி மதுபாட்டில்கள் பற்றி நான் அந்த நபரிடம் விசாரித்தபோது விற்பனைக்கு வைத்திருந்ததாக கூறினார். எந்தவொரு அரசு அனுமதியும் உரிமமும் இல்லாமல் அதிக லாப நோக்கத்துடன் மதுபாட்டில்களை

விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காகஅந்த இடத்திலேயே அந்த நபரை கைதுக்கான காரணத்தை கூறி காலை 11.10 மணிக்கு கைது செய்தேன். எதிரி வைத்திருந்த மது பாட்டில்கள், பாட்டில்களை வைத்திருந்த சாக்கு பை ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்ற அங்கிருந்த தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் என்னுடன் ரோந்து பணிக்கு வந்த காவலர் சாட்சிகள் முநிகா விக்னேஷ்குமார், தாமரைகண்ணன் ஆகியோர்கள் முன்னிலையில் 11.30 மணிக்கு அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி அத்தாட்சியில் சாட்சிகளிடம் கையெழுத்து பெற்றேன்.

**3.** பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி மற்றும் கைப்பற்றப்பட்ட சொத்துக்களுடன் 12.00 மணிக்கு அருப்புக்கோட்டை நகர் காவல் நிலையம் வந்து குணசேகரன் என்பவர் மீது நிலைய குற்ற எண். 110/2026 பிரிவுகள் 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின்னர் அசல் முதல் தகவல் அறிக்கையையும் அசல் அத்தாட்சியையும் கனம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்தேன்.

4. பின்னர் எதிரியை நிலைய பாராவசம் ஒப்படைத்து தக்க இருநபர் ஜாமீனில் நிலைய பிணையில் விடுவித்தேன். பின்னர் அன்றைய தினமே என்னுடன் ரோந்து பணிக்கு சென்ற சாட்சிகளான முதல் நிலை காவலர்கள் விக்னேஷ்குமார், தாமரைகண்ணன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் பணிமாறுதலில் சென்றுவிட்டபடியால் வழக்கு கோப்பினை நிலையத்தில் ஒப்படைத்து சென்றேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. சம்பவ இடமானது பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். எதிரியிடமிருந்து மதுபானங்கள் கைப்பற்றப்பட்டதாக கூறப்படும் சமயத்தில் வீடியோ பதிவு எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவத்தன்று நான் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடமிருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை

என்றால் சரியல்ல. பொதுமக்கள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. காவல் நிலையத்தில் வைத்து அத்தாட்சி தயார் செய்து நிலையத்தில் இருந்த காவலர்களிடம் கையொப்பம் பெற்றுவிட்டு தற்போது உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை எங்கள் உயர் அதிகாரி கேட்டு கொண்டதற்கு இணங்க எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உண்மையில் எதிரியிடமிருந்து மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு இருந்தால் அவற்றை நான் வீடியோ பதிவு செய்திருப்பேன் என்றாலும் சம்பவம் எதுவும் நடைபெறாத காரணத்தில் தான் வீடியோ பதிவு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

**இல்லை**